# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No.46/2024**

Deposition of Witness of PW3

| | | | |
|---|---|---|---|
| Name | : சடையப்பன் | Calling | : |
| Father/Husband's Name | : | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 29th January 2026.

எதிரி ஆஜரில் இல்லை.
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் ஈஞ்சம்பள்ளி கிராமம் ஆனந்தம்பாளையத்தில் வசித்து வருகிறேன். மொடக்குறிச்சியில் சலூன் கடை வைத்து நடத்தி வருகிறேன். 02.08.2019 அன்று மதியம் 1.00 மணி அளவில் நானும் செந்தில் என்ற என்னுடைய நண்பரும் ஊத்துக்குளிக்கு என் நண்பனுக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தோம். அப்பொழுது நஞ்சை ஊத்துக்குளி நாலு ரோடு அருகே மொடக்குறிச்சி போலீசார் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தார்கள். எங்கள் பைக்கையும் நிறுத்தி போலீசார் விசாரித்தார்கள். அதேபோல நடந்து வந்த இரண்டு நபர்களையும் போலீசார் விசாரித்த போது அவர்கள் முன்னுக்கு போன் முரணாக பதில் சொன்னார்கள். அந்த இருவரில் ஒருவர் பெயர் பாசில் என்றும் மற்றொரு பெயர் பிரவீன் குமார் என்றும் போலீசார் விசாரித்த போது சொன்னார்கள். அவர்களை போலீசார் விசாரித்து லேப்டாப்பில் டைப் செய்து கொண்டிருந்தார்கள்.

2. ஆலுத்துப்பாளையம் மற்றும் வேலம்பாளையம் ஆகிய இடங்களில் திருடியதாக சொன்னார்கள். மேற்படி திருட சென்ற இடங்களில் எதுவும் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். இரண்டு பேரும் சேர்ந்து திருட சென்றததாக தான் போலீஸ் விசாரணையில் ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும்,

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.01.29 17:11:20 +0530

செந்திலும் சாட்சியாக கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் காட்டப்படும் பாசில் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து ஆ.சா.ஆ.2 குறியீடு செய்யப்படுகிறது.** மேலும் என்னிடம் மேற்படி பாசிலை பார்த்தால் எனக்கு தற்பொழுதும் அடையாளம் தெரியும். எதிரி வேறொரு வழக்கில் சிறையில் உள்ளதால் இன்று நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை எதிர் தரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகி இருந்தார் எதிரியின் அடையாளம் குறித்து ஆட்சேபனை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. என்னிடம் காட்டப்படும் பிரவீன்குமார் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து ஆ.சா.ஆ. 3 குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**

நான் சலூன் கடை வைத்துள்ளதால் மொடக்குறிச்சி போலீஸார்கள் எனக்கு பழக்கம் என்றால் சரிதான். அந்த அன்றைய தினம் அந்த பக்கம் செல்லும் போது அந்த 2 நபர்களிடம் போலீஸார்கள் நிறைய கேள்வி கேட்டார்கள் என்றால் சரிதான். கேட்க கேட்க குறித்து வைத்துக்கொண்டு லேப் டாப்பில் பதிவு செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். ஒரு நபரின் வாக்குமூலம் பதிவு செய்ய 1 மணி நேரம் ஆனது என்றால் சரிதான். அது முழுவதுமான என்ன விபரம் இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சொன்னதுபோல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்திற்கு போகவில்லை என்றும், பாசில் என்ற நபரை பார்க்கவில்லை என்றும், பாசில் போலீஸாரிடம் எந்தவொரு ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் காவல்நிலையத்தில் எதுவும் பூர்த்தி செய்யாத வெற்று தாளில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.01.29 17:11:26 +0530